விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 20 முஹற 10 இதழ் 234
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 6-10-84

## பருத்தித்துறை நேற்றும் வெறிச்சோடிக்காணப்பட்டது!

### கடை அடைப்பு; பஸ்சேவையும் இல்லை!

(புலோலி)

பருத்தித்துறை நகர் நேற்றும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

கடைகள் யாவும் காலை சிறிது நேரம் திறந்திருந்த போதிலும் பின்னர் முழுமையாக மூடப்பட்டன.

நகரில் இ.போ.ச.பஸ் மற்றும் தனியார் பஸ்கள் எதுவும் ஓடவில்லை. நகரின் வீதிகளில் சனநடமாட்டமும் காணப்படவில்லை.

இப்பகுதி முழுவதும்பதற்ற நிலையே காணப்பட்டது.

இராணுவத்தினர் நேற்றுக் காலை புலோலி பிரதான வீதியிலியிருந்து கிராமக்கோடு சந்திவரை கவச வண்டிகளில் காவல் புரிந்தனர். அவர்கள் வீதியால் வந்த சகலரையும் சோதனையிட்டனர்.

நேற்று முன்தினம் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான சுங்கப்பகுதிக் கட்டிடம், பருத்தித்துறை நீதவான் வாசஸ்தலம் ஆகியவற்றில் வெடிக்கப்படாமல் கிடந்த இரண்டு குண்டுகளை இராணுவத்தினர்

(5-ம் பக்கம் பார்க்க)

# 1623 தமிழ் அகதிகள் பிரச்னை:

# 'சுவிஸ்' அரசாங்கத்தில் பிளவு!

## திருப்பி அனுப்பும் முடிவுக்கு சோஷலிஸ கட்சிகள் எதிர்ப்பு

(ஜெனீவா, அக் 5)

**சுவிற்சர்லாந்தில் அரசியல் புகலிடம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்களை தாயகத்துக்குத் திருப்பி அனுப்புவது தொடர்பாக சுவிற்சர்லாந்து அரசாங்கம் எடுத்த முடிவு குறித்து சுவிஸ் கலப்பு அரசாங்கத்தில் பெரும் கருத்துவேற்றுமை ஏற்பட்டுள்ளது.**

அரசாங்கத்தின் சமஷ்டிச் சபை 150 இலங்கைத் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப முடிவு செய்துள்ளது ஆனால், அரசாங்கத்திலுள்ள சோஷலிஸ்ட்டுகள், இந்த முடிவை கடுமையாக எதிர்த்துள்ளனர்.

சுவிற்சர்லாந்தில் சுமார் 1623 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக அரசியல் புகலிடம் கோரிவருகின்றனர். இவர்களில் 150 பேரை இக்கோரிக்கைக்கான தகுந்த காரணம் சமர்ப்பிக்கப்படாததால் தாயகத்துக்குத் திருப்பி அனுப்ப சமஷ்டி சபை முடிவு செய்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் இரு சிரேஷ்ட சுவிஸ் அதிகாரிகள் இலங்கை சென்று நேரடியாக அங்குள்ள தமிழர் நிலைபற்றி அறிக்கை ஒன்றை சுவிஸ் அரசுக்கு சமர்ப்பித்தனர்.

இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் முடிவை சோஷலிஸ்ட் தரப்பினர், கலப்பரசாங்கத்திலுள்ள சமூக ஜனநாயக வாதிகள், கிறிஸ்தவ ஜனநாயகவாதிகள் மற்றும் தீவிரவாதிகளும் இவ்விவகாரம் தொடர்பாக எதிர்த்துள்ளனர். (கி)

### முக்கிய தொலைதொடர்பு கருவிகள்

## பொலிஸாரினல் அகற்றப்பட்டது

(திருகோணமலை)

திருகோணமலை தொலைத் தொடர்புநிலைக்களத்திலுள்ள பிரதான தொலைத் தொடர்புக் கருவிகள் யாவும் பொலிஸாரினல் அங்கிருந்து அகற்றப்பட்டு பொலிஸாரின் பாதுகாப்பில் தற்போது வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் சமயத்தில் தொலைத்தொடர்பு நிலையத்தார் பொலிசாரிடம் சென்றுஇக்கருவிகளைப் பெற்று அஞ்சல் சேவையை மேற்கொள்கின்றனர்கள்.

மன்னர், யாழ்ப்பாணம் தொலைத் தொடர்பு நிலையங்களில் அண்மையில் பிரதான தொலைத் தொடர்புக் கருவிகள் கொள்ளையடிக்கப்பட்டதன் எதிரொலியாகவே இந்த நடவடிக்கை திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (சூ)

### நெடுந்தீவுக்கடலில் இனந்தெரியாத சடலங்கள்

[கொழும்புத்துறை]

நெடுந்தீவுக் கடலில் இனந்தெரியாத சடலங்கள் மிதப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. தினமும் பிரேதங்கள் கடலில் மிதப்பதால் மீனவர்கள் நெடுந்தீவுக் கடலில் மீன் பிடிக்கச் செல்வதற்கு அச்சம் அடைந்துள்ளனர்.

இதனல் நெடுந்தீவிலும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் பீதியுடனேயே வாழுகின்றனர். அடிக்கடி நெடுந்தீவில் திடீர் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவாம்.

### இரவுப்பயணம்: 'லலித்' எச்சரிக்கை

[கொழும்பு]

''வடபகுதியில் இரவு வேளையில் பயணம் செய்வது பாதுகாப்பற்றதாக இருக்கிறது. எனவே இரவுப் பயணங்களை மக்கள் தவிர்த்துக்கொள்வது நல்லது'' என்று அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வவுனியா படுகொலை குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு ஆலோசனை கூறினர்.

### யாழ். ஐக்கியவியாபாரச் சங்க

## ஊழியர்களின் உருக்கமான அமைதிப் போராட்டம்!

[யாழ்ப்பாணம்]

யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கத் தலைமைக்காரியாலயமும், மற்றும் வடபகுதியிலுள்ள அதன் கிளைகளும் நேற்று மூடப்பட்டு. சங்கத்தின் ஊழியர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கி அரை நாள் வெளிநடப்புச் செய்தனர்.

நேற்று நண்பகல் 12-30 தொடக்கம் 2-30வரை இந்த அமைதிப் போராட்டம் நடைபெற்றது

இச்சங்கத்திலும் அதன் கிளைச் சங்கத்திலும் அடிக்கடி ஆயுதபடையினராலும், இனந்தெரியாத நபர்களாலும் மேற்கொள்ளப்பட்ட அழிவு, கொள்ளைச் சம்பவங்களைத் தொடர்ந்து ஊழியர்கள் தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலையில் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக ஈடுபட வேண்டியுள்ளதையும், தங்களுக்கு தொழில் தந்துகொண்டிருக்கும் சங்கத்

(5-ம் பக்கம் பார்க்க)

## மொரார்ஜி கொடும்பாவி: திராவிடகழகத்தினர் கைது!

(சென்னை)

சென்னை அண்ணா சாலையிலுள்ள அண்ணாசிலைக்கு முன்பாக இந்தியாவின் முன்னாள் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயின் கொடும்பாவியை எரிக்க திராவிடர் கழகத்தினர் முயன்ற போது பொலிசாரினல் கைது செய்யப்பட்டனர்.

இலங்கைத் தமிழர்களுச்கு எதிராக திரு. மொரார்ஜி தேசாய் கருத்துக்களைத் தெரிவித்து வருவதினலேயே அவரின் கொடும்பாவியை எரிக்க திராவிடர் கழகத்தினர் முயன்றனர்.

இவரின் கொடும்பாவியை எரிக்க முயல்வதற்கு முன்னர் திராவிடர் கழகத்தினர் பெரியார் சிலையிலிருந்து ஊர்வலமாகச் சென்று மொரார்ஜி தேசாய் இலங்கைத்தமிழர்கள் தொடர்பாகத் தெரிவிக்கும்

(5ம் பக்கம் பார்க்க)

### வடபகுதி பயங்கரவாத சம்பவங்கள்:

## கைதான 125 பேர் மீது வழக்கு தாக்கலாகும்!

(கொழும்பு)

வடபகுதிப்பயங்கரவாத சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் 125 பேருக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது சந்தேகத்தின் பேரில் தற்போது 350 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் இவர்களைவிட காலி பூஸா இராணுவ முகாமில் மேலும் 60

(5-ம் பக்கம பார்க்க)

### கூட்டணி தலைமையகத்தில் நாளை கருத்தரங்கு

[கோண்டாவில்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நல்லூர்த் தொகுதிக்கிளை உறுப்பினர்களின் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது நல்லூரிலுள்ள கூட்டணி

[5ப் பக்கம் பார்க்க]

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோண்டாவில்மேற்கு, குமர கோட்டம் சகல வசதிகளுடன் 4 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: உரும்பிராய், 'யூனிபோ'க்கு முன்பாக. M.S.பாலன், உரும்பிராய் தெற்கு. 2049

யாழ்ப்பாணத்தில் வீடும், காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 12A,5-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 65

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இலக்கம் 22, பிறவுண் ரேட்டு 2-ம் ஒழுங்கையில் 2½ பரப்புக்காணி சுற்றுமதிலுடனும் சகல பிரயோசனங்களோடும், நல்ல தண்ணீர்க் கிணற்ருேடும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க. அ. இராயரத்தினம், 16, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 62

சண்டிலிப்பாய் · மாசியப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் 12 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு தொடர்பு; எஸ். என். சிவானந்தன், 23/24, கந்தையா வாத்தியார் வீதி, கந்தரோடை, சுன்ஞகம். 58

மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த 28 பரப்புக் காணி விற்பனைக்குண்டு பரப்பு ரூபா 7000/00. வீடு, மில், வேலை ஸ்தலத்திற்கு உகந்தது. தொடர்பு: வயிரவநாதன், சுட்டுடை, மானிப்பாய். 54

ஏ 40, பேரிஞு (Farina) கார் விற்பனைக்குண்டு அல்லது ஹொண்டா மோட்டார் சைக்கிளுடன் மாற்றலாம். விபரங்களுக்கு இல. 7, நிக்கலஸ் ஒழுங்கை, கச்சேரி-நல்லூர் வீதி, சுண்டிக்குளி .57

ஹப்புத்தளையில் பிரத்தியேகமாக அரிந்ததும், அலுமாரி, தளபாடங்கள் செய்வதற்கு உகந்ததும், பூச்சிகள் தாக்காது நறுமணம் உடையதுமான, ஒவ்வொன்றும் 6 அங்குலத்திற்கு கூடுதலான அகலமுள்ள 2000 சதுர அடிக்கு மேற்பட்ட 'தூஞ' (Cypress) மரப் பலகைகள் மொத்தமாக விற்பனைக்குண்டு. விலை ரூபா 46 000/- மேல் நேரில் வரவும். அழகரத்தினம், 21/1 றக்கா ரேட், யாழ்ப்பாணம். 17

ஆனைக்கோட்டையில் நல்ல சுற்ருடலில் பிரதான வீதியில் தபாற் கந்தோர், டிஸ்பென்சரி, கூட்டுறவு விற்பனை நிலையம் முதலியவற்றிற்கு அண்மையில் பிரபல ஆண், பெண் பிள்ளைகளின் கல்லூரிகளுக்கு அண்மையில் ஐந்து பரப்புக் காணியில், ஐந்து படுக்கை அறைகளும் ரெருசோ நிலமும் மற்றும் சகல நவீன வசதிகளும் கொண்ட மேல் மாடி வீடு விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் உடனே தொடர்பு கொள்க: அரசரத்தினம், கந்தன் அருள், 54, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 23175 3

## வாடகைக்கு

ஓய்வுபெற்றவருக்கு (Pensioner) வீடு/பகுதி வீடு (Annexe) அல்லது இரு அறைகள் சகல வசதிகளுடனும் நல்லூர், திருநெல்வேலி, வண்ணார்பண்ணை அல்லது கொக்குவில் பகுதியில் வாடகைக்குத் தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 48 C/o ஈழநாடு. 48

## தேவை

Marketing Assistant தேவை. தகுதி திறமையுடையவர்கள் 12-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். டைனமிக் என்ஜினியரிங் லிமிட்டெட், 43, பாங்ஷால்வீதி, யாழ்ப்பாணம். 45

கிளிநொச்சி பால் சபைத் தொழிற்சாலைக்கு அனுபவம் வாய்ந்த எலெக்ரிசன் தேவை சம்பளம் தகமைகளுக்கேற்ப வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் தங்கள் எழுத்து மூலமான விண்ணப்பம் தகமைச் சான்றிதழ்களுடன் ஒக்ரோபர் 10ம் அல்லது 11-ம் திகதி காலை 10 மணிக்கு மேற்படி காரியாலயத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் தரவும். முகாமையாளர். 39

## அறிவித்தல்

### மின் தடை

இலங்கை மின்சார சபையினரால் சில அத்தியாவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் 07-10-84 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி முதல் மாலை 6 00 மணிவரையும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் மின் விநியோகம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பது முன்கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சீ.வீ.கே. சிவஞானம்
ஆணையாளர்
யாழ். மாநகராட்சி மன்றம்

மாநகர சபை
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
04-10-1984. 55

## ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 151, கஸ்தூரியார் வீதி, தற்போது 22, கன்ஞதிட்டி வீதி சத்தியா அன் கோ. அவர்களிடம் 15-8-82 முதல் 30-9-83 வரை அடைவுவைத்து மீட்கப்படாத நகைகள் 9-11-1984 காலை பத்து மணி தொடக்கம் அதே கடையில்வைத்து என்ஞல் விற்கப்படும்.

கு. இராஜகோபால்
ஏல விற்பனையாளர்
வண்ணார்பண்ணை. (33)

## VACANCIES

Following required for immediate employment

**Book-keeper, Typist**
(Tamil/English)

Apply immediately giving full bio-data to

ACCOUNTING SERVICES
c/o K. Pirapagaran
Sannathy Road,
Atchuvely. 2048

## முதலாவது பிறந்த தின வாழ்த்து



செல்வன்
ஜனார்த்திக்
காசிலிங்கம்

104, சட்டநாதர் வீதி, நல்லூரைச் சேர்ந்த காசிலிங்கம் - மலர்மகள் தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜனார்த்திக் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (6-10-84) தனது இல்லத்தில் அண்ணு கார்த்திக்குடன் கொண்டாடுகிருர். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, பப்பா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சின்னம்மாமார், மச்சான்மார், மச்சாள்மார், விஜய் அண்ணு, மது அக்கா, தங்கை துர்க்கா, மற்றும் உறவினர்களும், நண்பர்களும் நல்லூர் முருகன் அருளால் சீரும், சிறப்புடனும் வாழ்கஎன வாழ்த்துகிருர்கள். 68

## முக்கிய அறிவித்தல்

### மின் விநியோகம்

1984-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு யாழ்ப்பாணம் 132, கே. வி. மின் மார்க்கம், அனுராதபுரத்திலிருந்து தடை செய்யப்படவிருப்பதால் சுன்ஞகம், காங்கேசன்துறை, வேலணை, கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், முல்லைத்தீவு, துணுக்காய் போன்ற இடங்கள் அடங்கிய கிளிநொச்சி—யாழ். பிரதேசங்களின் பெரும்பாலான பகுதிகளில் மின்சார விநியோகம் தடைப்படும் என அறியத்தருகிறேன்.

மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை, சுன்ஞகம்.
36

## விற்பனைக்கு

சீன வர்க்க நெல் அரிசி ஆலை இயந்திரம்
(HULLER WINOVER and GRINDER)
விற்பனைக்கு உண்டு.
மேலதிக விபரங்களுக்கு

**எஸ். சின்னத்துரை அன் கோ**
இல. 25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே. இல. 23357
(66)

## LAW BOOKS

Corpus Juris - K. Balasingham

Now out of print. Limited number of certain volumes, dealing with Civil procedure code, Partition and Penal Code, Muslim Law, Thesavalamai etc. Also a few odd parts for those desiring to complete their sets.

Apply to: C. Balasingham, Attorney-at-Law, 37/2, Kachcheri Nallur Road, Jaffna. 66

## 31-வது நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

அலோசியஸ்
அமிர்தநாதன்



தோற்றம்: 18-9-1950

மறைவு: 6-9-1984

உள்ளமெல்லாம் நீ நிறைந்து உம் நினைவால்
வாழ்ந்த எம்மை
நீர்க்குமிழி வாழ்வென்று நீரில் மறைந்து விட்டாய்
பதியிழந்தோம், கதியிழந்தோம் பாரினில்
இனி யாரெமக்கு
கரம் நீட்டிக் காத்திடுவாய் கர்த்தராய் நின்றென்றும்.

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்குகளின் போது நேரில்கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மற்றும் சகல வகைகளிலும் உதவி புரிந்த அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

மனைவி, பிள்ளைகள், பெற்ருேர், சகோதரர்,
மற்றும் உறவினர்.

40/4, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 64

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி

ஆறுமுகம் செல்வரட்ணம்
(முன்னைய வெலிங்டன் படமாளிகை முகாமையாளர்)



மலர்வு:
05
|
03
|
1929

உதிர்வு:
29
|
09
|
1983

ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மற்றும் உறவினர்.

''மிருணளி'', மஞ்சவனப்பதி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு. (56)

# இஸ்ரேலை ஐ. நா. ஸ்தாபனத்திலிருந்து வெளியேற்ற ஈரான் முயற்சி!

## சிமோன்பெரஸின் ஐ நா. உரையின் போது 60 நாடுகள் வெளிநடப்பு!!

**நியூயோர்க், அக், 5**

**ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திலிருந்து இஸ்ரேலை வெளியேற்றும் பிரேரணையொன்றை ஈரான் முன்மொழிய விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பிரேரணை எதிர்க்கப்பட்டால் அவ்வெதிர்ப்பை முறியடிக்கவும் ஈரான் உறுதி பூண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.**

பாலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலிய அரசாங்கத்தினுல் தொடர்ந்து பல வேதனைகளை அனுபவித்து வருவதையடுத்தே உலக சமூகங்களின் ஒற்றுமையைப் பேணும் ஐ நா. அமைப்பிலிருந்து இஸ்ரேலை வெளியேற்ற ஈரான் முடிவுசெய்திருக்கிறதென்று ஐ நா வுக்கான ஈரான் பிரதிநிதி கூறினுர்.

ஈரான் பிரதிநிதி ராவு சஞ்சாய் இஸ்ரேலை வெளியேற்றும் பிரேரணையை தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐ நா. கூட்டத் தொடரில் தாம் சமர்ப்பிக்கவிருப்பதாகக் கூறினுர்.

### வெளிநடப்பு

இதேவேளை இஸ்ரேலிய கூட்டரசாங்கத்தின் புதிய பிரதம மந்திரி திரு. சிமோன்பெரஸ் நேற்று ஐ நா. சபையில்உரையாற்றினுர். அப்போது அவரது பேச்சை செவிமடுக்காது சுமார் 60 நாடுகளின் பிரதிநிதிகள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இஸ்ரேலை ஐ. நா. விலிருந்து வெளியேற்றக் கோரும் பிரேரணையை அமெரிக்கா எதிர்க்குமென்றே ஈரான் எதிர்பார்க்கின்றது. அப்படி எதிர்ப்பு ஏற்படுமாளுல் அதனை எதிர்த்து முறியடிக்கவும் ஈரான் உறுதி பூண்டிருப்பதாக ஈரான் பிரதிநிதி சஞ்சாய் மேலும் தெரிவித்தார். [கி]

## தாயகத்தில் இறப்பதற்கு விமானத்தைக் கடத்தினுர்!

பொகொட்டா, அக். 5

புற்று நோயினுல் பாதிக்கப்பட்டுள்ள ஒருவர் தமது தாயகத்தில் சாவதற்கு விரும்பி விமானமொன்றைக் கடத்தினுர்!

இச்சம்பவம் கரீபியன் கடல் பகுதியில் கடந்த புதன் கிழமை இடம் பெற்றது. கியூபா நாட்டவரான அக்கடத்தல்காரர் கரீபியன் தீவுகளிலுள்ள பொகொட்டா என்ற இடத்தில் இருந்து சரக்கு விமானமொன்று கொலம்பியா நோக்கிப் புறப்பட்டதும் அவ்விமானத்தை கியூபாவிற்குக் கடத்தினுர்.

அவர் அவ்விமான காப்டனின் தலையில் துப்பாக்கியை அழுத்தி, தமக்கு புற்று நோய் ஏற்பட்டிருப்பதாகவும், தமது தாயகமான கியூபாவிலேயே தான் மரணமாக விரும்புவதாகவும் கூறி தம்மை அங்கு கொண்டு விடும்படி மிரட்டினுராம்.

அந்நபர் தமது மனைவி பிள்ளைகளுடனேயே அவ்விமானத்திலிருந்தார். அவரின் கோரிக்கை அவ்விமானியால் ஏற்கப்பட்டது. ஹவாளுவில் அவர் இறக்கப்பட்டார்.

ஆனுல் அரோக்கா என்ற அந்த புற்றுநோய்க் கடத்தல்காரரும், அவரது குடும்பமும் ஹவாளுவில் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்! (கி)

## காஷ்மீரில் கலவரம் இளம் ஆசிரியை சுட்டுக் கொலை!

ஸ்ரீநகர், அக். 5

காஷ்மீர் மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற கலவரமொன்றில் 21 வயதான இளம் பள்ளி ஆசிரியை ஒருவர் தலையில் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார்.

ஸ்ரீநகரில் நேற்று முஸ்லிம்களின் மத ஊர்வலமொன்று நடத்தப்பட்டது. அப்போதே அங்கு அரசியல் பிரச்னை ஒன்று தோன்றி அவ்வூர்வலம் கலவரத்தில் முடிந்தது.

இதனையடுத்து ஸ்தலத்திற்கு வந்த பொலிசார் கலவரக்காரர்களை அடக்க துப்பாக்கிப்

(·ம் பக்கம் பார்க்க)

## தென்லெபனுனிலிருந்து இஸ்ரேலை அகற்ற அமெரிக்கா8அம்ச யோசனை!

பெய்ரூட், அக். 5

தென் லெபனுனிலிருந்து இஸ்ரேலை வெளியேறச்செய்யும் வகையில் அமெரிக்கா எட்டு அம்ச யோசனையொன்றைத் தெரிவித்துள்ளது.

இந்த யோசனையைப் பிரதி அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. ரிச்சார்ட் மேர்வி, லெபனுன், சிரியா, இஸ்ரேல் ஆகியவற்றுக்குப் பயணம்செய்த பின்னர் லெபனுன் அரசிடம் வெளியிட்டுள்ளார்.

இந்த யோசனைபற்றி லெபனுன் வெளிநாட்டமைச்சர் திரு நமிபெரி நேற்று நியூயோர்க்கில் தெரிவித்தார். இஸ்ரேலையும் சிரியாவையும் தென் லெபனுனிலிருந்து வெளியேறக் கோரும் இந்த யோசனை, மேற்காசிய அமைதித் திட்டமொன்றையும் தெரிவித்துள்ளது.

இதேவேளை இஸ்ரேலிய பிரதமர் திரு. பெரஸ், வட இஸ்ரேலில் போதியளவு பாதுகாப்பு நிலவினுல் தவிர தென் லெபனுனிலிருந்து இஸ்ரேல் வாபஸாகாதென்று கூறியுள்ளார். [கி]

## தீவிபத்து 13 பேர்பலி!

ஹைதராபாத் அக் 5,

பட்டாசு தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தினுல் 13 பேர் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் ஆந்திரமாநிலத்திலுள்ள அனந்த பள்ளி என்ற ஊரில் நிகழ்ந்தது.

இக்கோரச் சம்பவத்தில் 9 பேர் காயமடைந்துள்ளனர். ஆந்திரமுதலமைச்சர் திரு. ராமராவ் இதுகுறித்துக்ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார். புலன்விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. (கி)

## மகாராணியாரின் வயோதிபம்; மக்களைக் கவர முடியவில்லை! கனேடியப் பத்திரிகைகள் கேலி!!

மொண்ட்றியல், அக். 5

''எலிசெபத் மகாராணியாரின் உடம்பில்வயோதிபம் நன்கு தெரிகின்றது; களைப்படைந்து காணப்படுகின்ருர். மக்களை முன்பு போல் அவரால் கவரமுடியவில்லை.''

இவ்வாறு கனேடியப் பத்திரிகைகள் பல பிரிட்டிஷ் எலிசெபத் மகாராணியாரைக் கேலி செய்து கொட்டை எழுத்துக்களில் எழுதியுள்ளன.

மகாராணியார் தற்போது கனடாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்ருர். இத்தடவை கனேடியப் பத்திரிகைகள் மகாராணியாரின் நடை, உடை பாவனைகளுக்கே கூடுதல் முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

கனேடியப் பத்திரிகைகளின் மேற்கண்ட கேலித்தனமான தகவல்கள் குறித்து பிரிட்டிஷ் பத்திரிகைகள் பல ஆத்திரமடைந்துள்ளனவாம். அவை மகாராணியாரைக் கேலி செய்துள்ள கனேடியப் பத்திரிகைகளை தாறுமாருகத் தாக்கி வருகின்றன என்று கூறப்பட்டது. (கி)

## ஆர். வி. சுவாமிநாதன் காலமானுர்!

சென்னை, அக் 5,

முன்னுள் மத்திய விவசாய இணை அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் நேற்று காலமானுர். இவருக்கு வயது 76 ஆகும்.

இருவாரங்களுக்கு முன்னர் மூளை நரம்பொன்று வெடித்ததனுல் பாதிக்கப்பட்ட இவர் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் நேற்றிரவு காலமானுர்.

தமிழ்நாடு சட்டசபையில் மூன்று பதவிக்காலங்களும், இந்திய லோக்சபாவில் 71ம் ஆண்டுமுதல் இரு பதவிக் காலங்களு இவர் உறுப்பினராக இருந்தார்.

திரு சுவாமிநாதன் இந்திய சுதந்திரப் போராட்டங்களில் தீவிரபங்குகொண்டவர். காமராஜர் உட்பட பல தலைவர்களுடன் இவர் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார். இவரின் மறைவுகுறித்து தமிழ் நாடு காங்கிரஸ்கட்சிப்பிரதிநிதிகளும், ஏனைய இந்திய அரசியல் பிரமுகர்களும் கவலை தெரிவித்துள்ளனர் (கி)


UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 11 மகாத்மா காந்தி ரோட்,
(சலுசலவுக்கு அண்மையில)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ் - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸதிரேலியா கட்டிடம்
த.பெ 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ். - 21652, 21742 21918 21931, PERIMR CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066



வெளிநாடு செல்வதற்கு

* விமான டிக்கட்:
விசேட கட்டணத்தில் லண்டன், சிங்கப்பூர், மலேசியா
SPECIAL FARE TO LONDON, SINGAPORE AND MALAYSIA
ZAMBIA SINGLE FARE RS 15717/-
RETURN RS 31434/-
சம்பியாவுக்கு ஒரு வழி ரூபா 15717/-
இருவழி ரூபா 31434-/

* அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை
(வங்கியின் கட்டணத்தில்) வாரநாட்களில் காலை 8 30 முதல் 4-30 வரை பெற்றுக்கொள்ளலாம்.
BUY YOUR AMERICAN EXPRESS TRAVELLERS CHEQUES ANYTIME BETWEEN 8-30 AND 4-30

* விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகலபிரயாண தேவைகளுக்கும்

இன்றே நாடுங்கள்

மக்கிஞேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways) பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154

மணிவாக்கு

கற்பனே, கடற் பிரயாணங்களை ஒத்தது — மலிவுங்கூட.

— ஜோர்ஜ் வில்லியம் கோர்டிஸ்

# நமது நோக்கு

## சிறுபான்மையருக்கு பௌத்த நீதி

அண்மையில் 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையின் தலையங்கமே நாம் இன்று ஆராய்வதற்கு எடுத்துக் கொண்ட விடயம்.

கடந்த வருட ஆடிக் கலவரத்திற்குப் பின் இத்தகைய தரமான கட்டுரையொன்று அதனைக் குறித்து எழுதப்பட்டது எமது அனுபவத்தில் இதுவே முதன் முறை.

இதனைப் பிரசுரித்த 'டெயிலி நியூஸ்' பத்திரிகைக்கு எமது அதிசயம் கலந்த நன்றி.

கட்டுரை ஆசிரியர் பேராசிரியர் மகிந்த பாலிஹவதன. அவருடைய திருநாமத்திற்கேற்ப சிறந்த பௌத்தர் மட்டுமல்ல பட்சபாதமற்ற ஆராய்ச்சியாளர் என்பதும் கட்டுரையில் புலனாகிறது.

சிங்கள இனம், சிங்களத் தேசியம், நாம் ஆள்பவர்— இவைபோன்ற இனவாத அரசியலும் இதில் எழுந்த அகங்கார அரசியல் கொள்கைகளும் பௌத்தம் எள்ளளவும் ஆதரிக்கவில்லையென்பது ஆசிரியரின் ஆணித்தரமான கருத்து.

இனவாதம் என்பது புத்த பெருமான் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் அங்கீகரிக்காத கொள்கை. பௌத்த சங்கமே இதனை ஆட்சேபிக்கத் துணியாதென்கிறார் பேராசிரியர்.

சிங்கள மொழி, பௌத்த கலாசாரம் போன்ற அடிப்படை அம்சங்கள் மறுக்கப்படவில்லை. ஆனால் இவற்றால் உருவாக்கப்படும் தேசியம், இனவாதம், இனவெறி — சிங்கள பௌத்தம் என்ற முரண்பாடுள்ள கருத்துக்களை புத்தபிரான் என்றும் போதிக்கவில்லை என்று மேற்கோள் காட்டி வாதிக்கிறார் பேராசிரியர் மகிந்த பாலிஹவதன,

'கடந்த ஆண்டுக் கலவரத்தைப்பற்றி கருணை நிறைந்த நீதி விரும்பும் பல பௌத்த மக்கள் ஆழ்ந்தகவலையடைந்துள்ளனர். மக்கள் கொல்லப்பட்டதும், அவர்களின் வீடுகள் எரிக்கப்பட்டதும், உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டதும் சாதாரண சிங்கள மக்கள் என்றும் விரும்பாதவை' என்கிறார் பேராசிரியர்.

சங்கிலிக் கோவை போல் இதனைத் தொடர்ந்து வரும் இன்றைய தீய நிலைமையில் பௌத்த தர்மம் என்ன போதிக்கிறதென்பதைத் தெளிவாக விளங்கும் சூழ்நிலை மறைந்து வருகிறது. இதுவே நாட்டுக்கு மிக அவலமான திருப்பம்.

இனவாதம் பெரும்பான்மை மக்களான சிங்கள பௌத்தர்களைப் பீடிப்பதற்கு எவ்வித நியாயமும் இல்லை; பண்டைக் காலம் தொட்டு சிங்கள மக்கள் சிங்கள இனத்தையும், தமிழ் மக்கள் தமிழ் இனத்தையும் அரசியலில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையின்றி மிகப் 'பிரம்மாதமாகப் பேசி, பிணக்குற்று போராடியது இன்றும் அது மறுதலிப்பதற்கு இடமளித்திருக்கிறதென்பது ஆசிரியரின் ஆராய்ச்சிக் கருத்து.

இதனை நாம் ஆட்சேபிக்கும் தகுதியுடையோரல்ல; ஆனால் மக்கள் எந்தநாட்டைச் சேர்ந்தவராலும், மொழி ஆர்வம், மதஆர்வம் இயற்கை; ஆனால் இவை மொழிவெறி மதவெறியாக மாறும் கட்டத்தில், ஜனநாயக கோட்பாடுகள் காற்றில் பறப்பதை நாம் நேரில் காண்கின்றோம்.

இனவாதம், இனத்துவேஷம் பெரும்பான்மைச் சிங்கள மக்களை மட்டும் பீடித்த வியாதியல்ல; ஆத்திரம் எதுவானாலும், முறைதவறி 'தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்று கோஷமிடுவது ஒருவித இனவாதம் என்பதும், அது எவ்வாறு இனவெறியாக மாறுமென்பதும் இலகுவில் முடிவுகட்டும் விடயங்களல்ல.

பௌத்த நீதியைத் தெளிவாக விளக்கின பேராசிரியர் ''இன்றைய நெருக்கடியை 'சிங்கள - பௌத்த' சித்தாந்த ரீதியில் அணுகுவது பெருந்தவறென்று திடமாகக் கூறியிருக்கின்றார்.

பௌத்தமதத்தைப் பாதுகாக்கும் ஒரு விசேட பொறுப்பு சிங்களமக்களுக்கு இல்லை. மதத்தை அரசியல் ஆதிக்கத்துக்குப் பயன்படுத்துவது பௌத்த மதத்துக்கு நேர்மாறு. ஆட்சிக்கு விரோதமான எதிரிகளைச் சிறையிட்டு, சித்திரவதை செய்து, கொன்று குவிப்பது அதர்மமென்றும், சிறைக் கைதிகளைக்கொண்டு கடின அபிவிருத்தி வேலைகளைச் செய்விப்பதே புத்த பகவான் போதித்த பாடம் என்பதும் கட்டுரையின் முக்கிய பாகமாகும்.

சுருங்கச் சொல்லில், ''ஆத்திரங் கொண்டவனை அன்பால் வெல்வாய், தீயவனை நன்மைகாட்டி வெல்வாய், பேராசை பிடித்தவனை தயாளத்தால் வெல்வாய், பொய்யனைச் சத்தியத்தால் வெல்வாய்' என்ற பெருமானாரின் மணிவாக்கு பேராசிரியர் கட்டுரையில் மிளிர்கிறது

வடக்கில் வாழும் தமிழர்களும், தெற்கில் வாழும் சிங்களமக்களும் இதனை, என்று வெறும் தத்துவமல்ல; செயல்வாதத்திற்குரிய உண்மையென உணர்கின்றனரோ அன்றுதான் நாட்டுக்கு விமோசனம் உண்டு.

மகாதேவ சுவாமிகள் நினைவு தினம் இன்று

# துறவி ஒருவரின் பற்று

நிலையாமை நோக்கி
நெடியார் துறத்தல்
தலையாகத் தான்
இனிது நன்கு
—இனியவை நாற்பது.

அவர் ஒரு நெடியவர்-ஆஜானுபாகு. இராணுவத்தில் சேர்ந்திருந்தால் பெரிய தளபதியாகி இருப்பார். அரசியலில் சேர்ந்திருந்தால் பெரிய மந்திரியாகி இருப்பார். கண்களைக் கவரும் வெண்ணிறம் கம்பீரமான தோற்றம். யாரையும் வசீகரிக்கும் உடற்கட்டு. உலகப்பற்றில் மூழ்கிக்கிடக்கும் சாதாரண மனிதர்கள் இந்த மனுஷன் ஏன் துறவியானார் என்று அதிசயத்தில் ஆழ்வார்கள். அப்படி இருந்தது அவர் நிலை.

கோப்பாயில் அரசாங்க ஆசிரிய பயிற்சிக் கலாசாலை நிறுவப் படாதபாடுபட்ட அருணாசலத்தாரின் தொடர்புதான் சுவாமிகளுக்குச் சைவக்கல்விக்காக உழைக்கும் மனப்பான்மையை உண்டாக்கியிருக்கவேண்டும். மதம்மாறி, ஆங்கிலம் கற்க விரும்பாது கல்விக்கு முழுக்குப்போட்டு விட்ட அவர், நல்ல கல்வி வித்திடும் சைவப்பாடசாலை ஒன்றை நிறுவும் பற்றை வேரூன்றி வளரவிட்டார். அப்பற்றானது ஆலவிருட்சம் போலத் தழைத்தது. கீரிமலையில் மடம் அமைத்த மகாமகோபகாரி வைத்திலிங்கம் பிள்ளையிடம் கணக்கப்பிள்ளை

அழைக்கப்பட்ட வைத்திலிங்கம் அவர்கள் மகாதேவசுவாமிகள் ஆயினார். சைவக் கல்வி ஊட்டி இளைஞரைச் சைவ வாழ்வு வாழப் பழக்கிய பணியில் தொடங்கி, சிவகுருநாத பீடம் அமைத்துச் சிவ தொண்டர்களை உருவாக்கும் பணியில் முடிந்தது அவர்கள் வாழ்வு.

''வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகர்'' ஆயினார்கள்.

ஆ. சபாரத்தினம்

(அதிபர், சண்முகநாத ம. வி.)

ஏதுனது தோற்றம் இது?
இழந்தனையோ அரும்
பொருளை?
இகழ்ந்தனரோ மைந்தர்?
காதல் கொள நீவிழைந்த
மாது பெரும் சூதாய்க்
கை விடுத்துக் கழன்
றனளோ?
மெய் விடுத்துக் கழறாய்!

என்று அவரை வினவவே மனம் தூண்டும்.

அப்படி ஒன்றும் நிகழ்ந்து விடவில்லை.

அவர் சாதாரண விவசாயியாக வாழ்ந்தார் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டார். கணக்கப்பிள்ளையாயிருந்தார். சீதனக்கொடுமை மிக்க யாழ்ப்பாணத்தில், தம் சகோதரிமாருக்கு உழைத்துச் சீதனம் கொடுத்து மணம் செய்து வைத்தார். சாதாரண உலகியலில் ஊறியவராக இளமைக் காலத்தை கழித்தார்.

★ ★ ★

''நல்லாரை காண்பதுவும் நன்றே.''

சுவாமிகள் இளமையில் கல்வி கற்ற கரம்பன் மேற்கு மிஷன் பாடசாலையில், ''அவருக்குப்பின் அருணாசலம்தான்'' என்று பண்டிதமணியவர்கள் நாவலருக்குப்பின் வைத்து எண்ணும் காரைதீவு அருணாசல உபாத்தியாயர் கல்வி கற்பித்துவந்தார். சைவ ஆசிரியர்களை உற்பத்திசெய்யக்

யாயிருந்த அவரே மடம் கட்டும் வேலைகளுக்கு மேற்பார்யாளராக இருந்தார். அங்கு பெற்ற அனுபவம் பிற்காலத்தில் இந்த வைத்திலிங்கத்திற்கும், கரம்பன் மேற்கு சண்முகநாத வித்தியசாலையைக் கட்டிமுடிக்க உறுதுணை புரிந்தது.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகப் பணி செய்பவருக்கு 'நான்' தேயும் 'எனது' அறும். பரோபகார முயற்சிகளின் இந்த நற்பயனாகவே தம்மையா எனச் செல்லமாக

அவர்களுடைய இறுதி மூன்று ஆண்டுகள் திருவாதிரை விழாவுக்குக் கரம்பன் சிவன்கோயிலுக்கு வரும்போது சுவாமிகளைப் பார்த்து அவரது துறவுக் கோலத்தில் மனதைப் பறிகொடுத்திருக்கிறேன். அவரது அயராஉழைப்பைப் பற்றிஅவருக்குப் பிடியரிசி சேர்க்கும் பணியில் உதவிய சிறுவர்களான ஏ. திருநீலகண்டன், வ. ஏகாம்பரம் அ. வல்லிபுரம் முதலியோர் கூறக்கேட்டுத் தன்னலமற்ற சேவையின் மகிமையை உணர்ந்திருக்கிறேன் அவரது துறவு ஒழுக்கத்தையும் அடக்கத்தையும் மதித்துப் பாராட்டும் மொழிகளைப் பண்டித மணியவர்கள் வாயிலாகக்கேட்டு மகிழ்ந்திருக்கிறேன் அவர்கள் வழிச்சென்றிலோ. என்று ஏங்கி இருக்கிறேன். பெரியோர் சென்ற பாதையில் அவர்கள் விட்டுச் சென்ற காலடிகள் எம்போன்ற அற்பகர்களுக்கும் திசைகாட்டுகின்றன. அவர் சென்ற வழிச் செல்ல ஆசைகொள்வோம்.

சுமாத்திராவிலுள்ள

# 23 சீனக் கோயில்கள் இந்துக்கோயிலாக மாறின

(தற்பொழுது சுமாத்திராவில் மீடான் நகரில் தங்கியிருக்கும் ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா அவர்கள் பின்வரும் தகவலை அனுப்பியுள்ளார்கள்.)

வடசுமாத்திராவில் உள்ள 23 சீனக்கோயில்கள் மிகக் குறைந்த கால எல்லைக்குள் இந்துக் கோயில்களாக மாறி பெயர்மாற்றம் செய்துகொண்டன. சங்கார்சிவா; சங்கார் நித்தியா; சங்கார் பிராக்மணு போன்ற பெயர்களை அக் கோயில்கள் பெற்றுள்ளன. சங்கார் என்பது கோயில் என்னும் பொருளுடையது. கோயில்கள் இந்துக் கோயில்களாக மாற்றம்பெற்ற உடனே அக்கோயில்களைச் சேர்ந்த நிர்வாகிகளும் அவர்களுடைய குடும்பங்களும் இந்துக்களாகி விட்டனர்.

சீனப் பொதுமக்கள் தாமாகவே வந்து மந்திர உபதேசம் பெற்று இந்துக்களாகிக் கொண்டு வருகின்றனர். எந்த இந்துவாவது தங்கள் சமயத்திற்கு வாருங்கள் என்று எந்தச் சீனரையும் அழைத்தது கிடையாது. இந்துசமய உண்மையை அறிந்து கொண்ட உடனே தாமாகவே தேடிவந்து இந்துசமயத்தவர்கள் ஆகிக்கொண்டு வருகின்றனர். பலசீனர்கள் சத்தியசாயி சமித்தியில் சேர்ந்து அட்சரசுத்தியாகப் பஜனை செய்கின்றனர். மிகச் சமீப காலத்தில் ஆயிரம் சீனருக்கு மேல் இந்துசமயத்தைத்தழுவி மந்திரதீட்சையும் பெற்றுள்ளனர்.

## 2 வருடங்களாகியும் முடிவுதெரியாது

1982ம் ஆண்டு கார்த்திகை மாதம் நடைபெற்ற ஆசிரியர் கலாசாலைப் பரீட்சைமுடிவுகளில் சில பரீட்சைமுடிந்து 2வருடங்களை நெருங்கும்வேளையிலும் வெளிவராதது வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருக்கிறது.

# மக்கள் கருத்து

ஏனைய பரீட்சை முடிவுகளை குறுகியகாலங்களில் வெளியிடும் பரீட்சைத் திணைக்களம் ஆசிரியர் கலாசாலை பரீட்சை முடிவுகளை வெளியிடாது தாமதிப்பதில் மர்மம் என்ன?

விஞ்ஞானம், சமூகவியல் போன்ற சில பாடநெறிகளுக்குரிய பரீட்சை 3மாதங்களுக்கு முன்வெளியாயின ஆனால் கணிதம், வணிகம், விவசாயம், ஆங்கிலம், உடற்கல்வி போன்ற நெறிகளுக்கான பரீட்சை முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை. இதனால் 1980-82 காலப்பகுதியில் ஆசிரிய கலாசாலைகளில் மேற்படி நெறிகளை மேற்கொண்ட ஆசிரியர்கள் மிகவும் வேதனை அடைந்துள்ளார்கள். பரீட்சைமுடிவுகளுக்காக அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

வெறும் ஆசிரியர் இடமாற்றங்களில் மட்டும் போர்க் கொடிஉயர்த்தும் ஆசிரியத் தொழிற்சங்கங்கள் இவ்விடயத்தில் அக்கறைகாட்டாதா?

பரீட்சைமுடிவை
எதிர்பார்க்கும்

மு. சொர்ணலிங்கம்
[ஆசிரியர்]
முள்ளியவளை

## சுங்க அலுவலகம் சபாஷ் பெறுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுங்க இலாகா அலுவலகத்தில் நடைபெற்ற சரஸ்வதி பூசையின் போது கற்பகதரு பனம் பழம் ஒன்று சுத்தமாக கழுவப்பட்டு திருநீறு, குங்குமம், இவைகளால் அலங்கரிக்கப்பட்டு பூரண கும்பம் போல் வைக்கப்பட்டிருந்தது. பனம் பழம் இப் பூசையில் விஷேட அம்சமாக அமைந்திருந்தது பெரும் சிறப்பு அம்சமாகவும் முன்னோடியாகவும் காணப்பட்டது

பொங்கலுடன் பூசை ஆரம்மாகியது மற்றுமொரு சிறப்பாக இருந்தது.

## ஜீப் கிடைத்தது ஆனால்......

(யாழ்ப்பாணம்)

கடந்த சனியன்று ஆயுதந்தரித்த மூன்று இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான ஒரு ஜீப்வண்டி இளவாலை கருகம்பானை என்ற இடத்தில்

(5-ம் பக்கம் பார்க்க)



மாலைத்தீவு அதிபர் அப்துல் கயூம் இலங்கை விஜயத்தின்போது ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவை அவரது மாளிகையில் சந்தித்து உரையாடினார்.

## வடபகுதிச்சம்பவம்:
## 20 தொழிற்சங்கங்கள் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் வடக்குப் பகுதியில் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் தொடர்ச்சியாக பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து இலங்கையின் 20 தொழிற்சங்கங்கள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளன.

இலங்கை கூட்டுத் தொழில் சங்க அமைப்பு, இலங்கை வர்த்தகர் ஊழியர் சங்கம், இலங்கை சுதந்திர தொழிற் சங்கக் கூட்டணி பொதுச் சேவைகள் தொழிற் சங்க கூட்டணி, ஐக்கிய அரசாங்க ஊழியர் கூட்டணி, ஐக்கிய தொழிலாளர் கூட்டணி, இலங்கை அரசாங்க சுதந்திர தொழிற்சங்கக் கூட்டணி, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை மத்திய சபை தொழிற்சங்கம், உள்ளூராட்சி எழுது வினைஞர் சங்கம் உட்பட 20 தொழிற் சங்கங்கள் கூட்டாக கையொப்பமிட்டு இந்த அறிக்கை வெளியிட்டுள்ளன.

''யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதத்தை அடக்குதல் என்ற பெயரில் பெருந்தொகையான மக்கள் கொல்லப்படுகின்றனர்கள். வவனியா, மன்னார் மாவட்டங்களிலும் இந்த முறையில் தாக்குதல் நடத்துகிறார்கள். தற்போது அரசாங்கம் தமிழர் பிரச்னையை ஜனநாயக முறையில் தீர்ப்பதற்கு பதிலாக இராணுவச் செலவுகளை அதிகரித்து அதிகரித்து இலங்கைப் பொருளாதாரத்தை கெடுத்து வருகிறது. அத்துடன் உலக விரோதிகளான இஸ்ரேலின் துணையை நாடியுள்ளது. இது இலங்கையில் தமிழர் பிரச்னையில் மேலும் சிக்கல்களை உருவாக்கும்'' என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இன்று நினைவு தினம்:
## 'சமூகத்தொண்டன்' மூப்பர் ஜேம்ஸ்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்ப ம்'' என்ற வள்ளுவரின் அருள்வாக்குக்கு ஏற்ப வாழ்ந்து இவ்வுலகை விட்டுமறைந்த அமரர் ஜேம்ஸ் மூப்பரின் நினைவு தினம் இன்றாகும். சமூக, சமுதாய முன்னேற்றத்தையும், சமய சேவையையும் கொண்டு உழைத்த அமரர் ஜேம்ஸ் தன்னுடைய இறுதிக்காலம்வரை தன் இலட்சியத்திலிருந்து மனந்தளராது உழைத்தார். குருநகரில் 1896 ஆம் ஆண்டு பிறந்த இவர் தன்னுடைய ஆரம்பக் கல்வியை சென். பற்றிக்ஸ் கல்லூரியில் பயின்றார்.

சமயப் பணியோடு நிறைவு பெறுமல், சமூகசேவைகளிலும் மக்களின் தரத்தை உயர்த்துவதற்கும் அவர்கள்சகல ஒடுக்குமுறைகளிலுமிருந்து விடிவு பெறுவதற்கும் அமரரின் முயற்சி பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். மக்களின் விடுதலைப் போராட்டத்தில் மூப்பர் சிறப்பாக பணியாற்றியதன் பேரில் பல சிறுபான்மை தமிழ் பிள்ளைகளின்கல்விக் கண் திறக்கப்பட்டது. 1955ம்ஆண்டுநடைபெற்ற சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் பன்னிரெண்டாவது வருடாந்த மாநாட்டு சிறப்பில் மூப்பர் முதன்மை பெற்று விளங்கினார். உரிமை குறைந்தோர் குரல்களையும், இதயக் குமுறல்களையும்அப்போதிருந்த ஆங்கில ஆட்சியாளரான டொனமூர் கமிசன் விசாரணையின் போதும், அதைத் தொடர்ந்து சோல்பரி கமிசன் முன்னிலையிலும் மகஜர் கொடுத்து சாட்சியளித்த குழுவிற்கு மூப்பர் தலைமையேற்று செயல்பட்டது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

சமூகப் பணியோடு அரசியலிலும் முன்நின்று உழைத்த அமரர் ஜேம்ஸ் யாழ் மாநகர சபை எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டு மாநகரசபை அந்தஸ்து பெற்றதின் பின்பு 1948 இல் கதீட்ரல் வட்டாரத்தில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டினார். பலதரப்பட்ட துறைகளிலும் பல நிலைகளின் மூலமாக சிறப்புற்று விளங்கிய இவர் ஆஸ்பத்திரிக் குழுவின் உறுப்பினராகவும், அகில இலங்கை பாடசாலை ஊழியர் சங்கத் தலைவராகவும், சமூக சேவைத் திணைக்களத்தின் கீழ் பொதுநல பரிபாலன சபையின் அங்கத்தவராகவும் பணியாற்றினார். ஜேம்ஸ் அவர்களின் இறுதிக் காலங்கள், இன்று பிரபலம் பெற்று விளங்கும் யாழ் சென் றோக் சனசமூக நிலையத்தை கட்டி எழுப்புவதில் கழிந்தது 10 ஆண்டுகள் இந் நிலையத்தின் தலைவராகவும், போஷகராகவும் செயல்பட்டார். அமரர் 6-10-1974ல் பரமபதமடைந்தார். நன்றி மறவாத மக்கள் அமரரின் பொதுத் தொண்டை கௌரவிக்கும் முகமாக சென். பற்றிக்ஸ் வீதி சந்தியில் அமரருக்கு உருவச்சிலை எழுப்பி இன்று அமரரை சிலை வடிவில் காண வழி சமைத்துள்ளனர்.

## பருத்தித்துறை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வெடிக்கச் செய்தனர்.

இதேவேளை நேற்றும், நேற்றுமுன்தினமும் இராணுவத்தினர் பருத்தித்துறையில் மேற்கொண்ட பலத்த சோதனைகளில் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சூ)

## யாழ். ஐக்கிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு பெரும் நஷ்டம் ஏற்படுவதையும் பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவே வெளிநடப்புச் செய்வதாக ஊழியர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

பின்வரும் சுலோகங்கள் பொறிக்கப்பட்ட சுலோக அட்டைகளைத்தாங்கிக் கொண்டு சுமார் 250 ஊழியர்கள் யாழ் பிரதானகிளை வாயில் முன்னிலையில் குழுமி நின்றனர்.

''எரிந்த நிலையில் இருக்கும் எமது ஸ்தாபனத்தை மீண்டும் மீண்டும் கொள்ளையடிப்பதன் நோக்கம் என்ன?''

''ஏழைத் தொழிலாளர் வாழ்வில் கைவையாதீர்! மக்கள் சொத்தில் கொள்ளை அடியாதீர்''

''நாம் பிறந்த மண்ணிலே எமது இனத்தவர்களால் எமக்கு மிரட்டலா?''

''மக்கள் சொத்தை கொள்ளையடியாதீர்''

''எமது நிறுவனத்தின் பணத்தை கொள்ளையடிப்பவர்கள் போராளிகளா?போலிகளா?''

இம்மாதம் 11ம் திகதி முழு நாளும் வெளிநடப்புச் செய்வதென்றும் ஊழியர்கள் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## இப்படியும் நடந்தது

[யாழ்ப்பாணம்]

கச்சேரி கிழக்கிலுள்ள வீடு ஒன்றுக்கு சென்றமாதம் 16-ம் திகதி இரவு வானில் வந்த சுமார் 10 இளைஞர்கள், தீவிரவாத இயக்கம் ஒன்றின் பெயரைக் குறிப்பிட்டு அந்த வீட்டின் உரிமையாளரையும் அவரது சகோதரியையும் வானில் ஏற்றிச் சென்றனராம்.

தற்சமயம் நீதிமன்றத்தில் நடைபெறும் விவாகரத்து வழக்கு குறித்தும், வேறு சில சம்பவங்களில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டு, இந்த இருவரையும் விசாரணை செய்வதற்காக அழைத்துச் சென்ற இளைஞர்கள் 45 நாட்களுக்குள் வழக்கு வாபஸ் பெறவேண்டுமென்றும், அவரது மோட்டார் சைக்கிளை தமக்குத் தர வேண்டுமென்றும் கூறி சில தாள்களில் கையொப்பம் வாங்கிய பின்னர் அவர்களை விடுவித்தார்களாம். அத்துடன் இவரது 'ஹெல்மெட்'டையும் இளைஞர்கள் எடுத்துச் சென்றுள்ளனராம்.

## யாருடையது

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த திரு பாலசிங்கம் பாலமுரளியின் அடையாள அட்டையை திரு கே காசிலிங்கமும், மானிப்பாய் மெம்மோறியல் ஒழுங்கையைச் சேர்ந்த திரு நடராசா தமிழ் செல்வம் என்பவரின் அடையாள அட்டையை திரு எஸ் சிவகுமாரும், வேலணை மேற்கு திரு தருமராசா தருமலிங்கத்தின் அடையாள அட்டையை திரு எஸ்.சோமசுந்தரமும், 3 திறப்புக்கள் கொண்டகோர்வையை திரு ச. குகதாசும் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலகநேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## ஜீப் கிடைத்தது...

[4ம் பக்கத் தொடர்ச்சி)

கைவிடப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஜீப்வண்டியில் பொருத்தப்பட்டிருந்த புதிய 'பாற்றறி' கழற்றி எடுக்கப்பட்டிருந்ததாகவும், கொள்கலன் நிறைய நிரப்பப்பட்ட பெற்றோல் ஒரு சொட்டும் இல்லாமல் எடுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## திருமலையில் பொதுஇடங்களில்
## குழிகள் தோண்ட
## முன் அனுமதி வேண்டும்!

[திருகோணமலை]

திருகோணமலை மாவட்டத்தில் பொதுவீதிகளில் மின்சாரகம்பங்கள், தந்திக் கம்பங்களுக்கு கிடங்குகள் தோண்டுவதற்கும், மற்றும் அபிவிருத்தி வேலைகளின் பொருட்டு குழிகள் தோண்டுவதற்கும் இனிமேல் முன் அனுமதிபெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் குழி தோண்டப்பட்டு இராணுவத்தினருக்கு குண்டுகள் வைக்கப்படுவதனை கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது.

திருகோணமலை மாவட்ட இணைப்பதிகாரி மல்கம் மார்ஷல் இந்த அறிப்பை விடுத்தார்.

வடமாகாணத்தில் பொது வீதிகள் திருத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது குறிப்படத்தக்கது. [சூ]

## பலியானவர்
## கரவெட்டியை சேர்ந்தவர்

(புலோலி)

பருத்தித்துறையில் நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர் கரவெட்டியைச் சேர்ந்தவரென்றும், 5 பிள்ளைகளின் தந்தையென்றும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சடலத்தை இவரது மனைவி நேற்று அடையாளம் காட்டினார். சடலம் தற்போது யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (சூ)

## ராமராவ் - இந்திரா சந்திப்பு

[புதுடில்லி]

ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் நேற்றுப் புதுடில்லியில் இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

திரு. ராமராவ் ஆந்திரா முதலமைச்சர் பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்டு, மீண்டும் முதலமைச்சரான பின்னர் நேற்றே முதல் தடவையாக திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது திருமதி இந்திராகாந்தி முதலமைச்சர் ராமராவ்வின் உடல் நிலை குறித்து விசாரித்தார்.

திருமதி இந்திராகாந்தியை ஆந்திராப் பிரதேசத்திற்கு விஜயம்செய்து, வறட்சிப்பகுதிகளை பார்வையிடுமாறு திரு. ராமராவ் விடுத்த அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டார்.

திருமதி இந்திராகாந்தி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆந்திரா மாநிலத்திற்கு விஜயம் செய்வாரென்று திரு. ராமராவ் நிருபர்களிடம் தெரிவித்தார். (வெ)

## கூட்டணி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யின் தலைமைக்காரியாலயத்தில் நடைபெறவிருக்கும் இக்கலந்துரையாடலில், கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் நிர்வாகச் செயலாளர் திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் உட்பட முக்கிய பிரமுகர்கள் உரைநிகழ்த்தவுள்ளனர்.

''இன்றைய அரசியல் நிலையில் தமிழ்மக்களின் பிரச்னை'' குறித்து விரிவாக ஆராய படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## மொரார்ஜி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துக்களுக்கு எதிராக ஆர்ப்பட்டமொன்றையும் நடத்தினார்கள்.

ஊர்வலத்தை திராவிடர் கழக பொதுச்செயலாளர் திரு. கி. வீரமணி தொடக்கி வைத்தார். (வெ)

## வடபகுதி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பேர் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 350 பேரும் நாட்டிலுள்ள பல்வேறு ராணுவ முகாம்களில் தற்போது வைக்கப்பட்டுள்ளனர்- இவர்களில் 125 பேரின் விசாரணைகள் முடிவடைந்து விட்டன. இவர்களுக்கு எதிராகவே விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இத்தகவல்களை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி ஊர்ஜிதம் செய்துள்ளார்.


யாழ்ப்பாணம்
அபிவிருத்திச் சபை
கொக்குவில், நல்லூர்
உப அலுவலகம்
வரியிறுப்பாளர்களுக்கான

### அறிவித்தல்

கொக்குவில், நல்லூர் உப அலுவலக வரியிறுப்பாளர்கள் 08-10-84ந் திகதி தொடக்கம் தமது வரிகளை குருநகரில் தற்போது மக்கள் வங்கி இயங்கும் இடத்திற்கு அருகாமையில் வானிலை ஆராய்ச்சி அலுவலகத்தில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள யாழ் அபிவிருத்திச் சபையின் சேகரிப்புக் கிளையில் வேலைநாட்களில் காலை 9-00 மணி தொடக்கம் காலை 10-45 மணிவரை தாம் செலுத்த வேண்டிய மின்கட்டணம், சோலைவரி, வாடகை, சந்தைக் குத்தகை, வியாபார உத்தரவுக் கட்டணம் போன்ற வரிகளைப் பணமாகச் செலுத்தி ஒத்துழைக்குமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வரியிறுப்பாளர் தம்முடன் எடுத்துச் செல்லும் சிட்டைகள் அறிவித்தல்களைக் கொண்டே பணம் ஏற்றுக் கொள்ளப்படும். ஆகையால் இவைகளைத் தவறாது எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மு. பஞ்சலிங்கம்,
செயலாளர்,
யாழ்ப்பாணம்
அபிவிருத்திச் சபை,

யாழ். அபி. சபை
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
05-10-84. 76

# செய்திச் சிதறல்

## பிரத்தியேக உதவியாளர்

(வண்ணார்பண்ணை)

இலங்கையில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவருக்கென பிரத்தியேக உதவியாளர் ஒருவரை நியமிக்க பனை அபிவிருத்திச் சபை அனுமதி வழங்கியுள்ளது.

இச்சபையின் தலைவரின் பிரத்தியேக வேலைகளைக் கவனிப்பதற்கென இந்த உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## மன்னாரிலும் கற்பகம்

(வண்ணார்பண்ணை)

மன்னாரில் பனை அபிவிருத்திச் சபையின் கற்பகம் விற்பனை நிலையம் ஒன்று விரைவில் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

மன்னாரில் லச்சல விற்பனை நிலையம் இயங்கிவந்த கட்டிடம் இதற்கென இச்சபையினால் பெறப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தை சபைஅதிகாரிகள் பார்வையிட்டபின் பொறுப்பேற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

## ஆசிரியர் விபரப்புத்தகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஆசிரியர்களுக்கு தற்போது சேவைவிபரப் புத்தகங்கள் வட்டாரக் கல்வி அதிகாரிகள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

இப்புத்தகம் 1982ம் ஆண்டுக்கு முன்பு நியமனம் பெற்றவர்களுக்கு கபிலநிறத்திலும், பின்பு நியமனம் பெற்றவர்களுக்கு சாம்பல் நிறத்திலும் வழங்கப்பட்டுள்ளது.

## பால் விற்பனை நிலையம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பலநோக்கு கூட்டுறவுச் சமாஜத்தின் பால் விற்பனை நிலையமொன்று நீதிமன்றத்திற்கு முன்பாக திறக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்திற்கு அருகாமையில் மட்பாண்ட விற்பனை நிலையமும் திறக்கப்பட்டுள்ளது.

## கட்டுரைப்போட்டியில் முதலிடம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை கல்விவட்டாரப் பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நடாத்தப்பட்ட தமிழ்த் தின விழா கட்டுரைப் போட்டியில் 10-ம் வகுப்பு மாணவிகள் பிரிவில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி. சாந்தினி கந்தசாமி முதலாமிடத்தை பெற்றுள்ளார்

இப்போட்டி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்றது இவர் பத்திரிகையாளர் திரு. என். எம். கந்தசாமியின் சிரேஷ்ட புதல்வியாவர்.

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

மட்டக்களப்பு பிரதம தபால் அலுவலகத்தில் உதவித் தபால் அதிபராக கடமையாற்றிய சங்கானையைச் சேர்ந்த திரு. ஏ. பாலசுப்பிரமணியம் இம்மாதம் தொடக்கம் பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்திற்கு உதவிதபால் அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## "சொந்த முயற்சி வேண்டும்"

(பண்டத்தரிப்பு)

"எமது பிரதேசத்தின் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றின் அபிவிருத்திகளுக்கு அரசின் உதவியை எதிர்பார்க்காது எமது சொந்த முயற்சியினால் மேற்கொள்ளவேண்டும்."

இவ்வாறு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் ரி. பகீரதன் சுழிபுரம் சுகாதார அபிவிருத்திச் சபையின் ஆதரவில் நடைபெற்ற சுகாதாரக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சபையின் தலைவரும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபருமான திரு. கே. அருணாசலம் தலைமையில் சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை மண்டபத்தில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

## மரம் நாட்டு இயக்கம்

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் மரம் நாட்டு இயக்கம் எதிர்வரும் 8-ம் திகதி திங்கட்கிழமையன்று நடைபெறவுள்ளது. மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திலும், அதனைத் தொடர்ந்து சங்கானை அரசினர் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் இந்த மரம் நாட்டு இயக்கம் அன்றையதினம் நடைபெறும் என்று வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் ரி பகீரதன் தெரிவித்தார்.

★ தூய அலுமினியம் ★ பிளாஸ்டிக்
★ எவர் சில்வர் ★ எனமல்
★ கண்ணாடி ★ தாச்சி வகைகள்
★ ஒக்கிட் (ORCHID) வாளிகள்
போன்ற பொருட்கள்,

மங்கள வைபவங்களுக்கு உகந்த
அன்பளிப்புப் பொருட்கள் யாவும்
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு எமது உற்பத்திப்
பொருட்களும், மற்றும் எனமல், பிளாஸ்டிக்
ஒக்கிட் வாளிகளும் விசேட கழிவுடன்
வழங்கப்படும்.

உங்கள் வசதி கருதி ஹோம் பிறைன்ஸ்
சொகுசு பஸ் ஆசனங்கள் எம்மிடம்
பதிவு செய்து கொள்ளலாம்.

நியூ லங்கா
அலுமினியம் தொழிற்சாலை
(விற்பனைப் பிரிவு)
இல, 6, 30, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்
போன்: 23596

## அரச அதிபருக்கு பாராட்டு

(மாவிட்டபுரம்)

யாழ். பதில் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தின் அயராத சேவையை வசாவிளான்—பலாலி சமூக சேவைக் குழு பெரிதும் பாராட்டியுள்ளது.

மேற்படி குழுவின் தலைவர் சட்டத்தரணி வி. இராசநாயகம் பொதுமக்களின் நலன் கருதி திரு. பஞ்சலிங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளையும், இன்னல்களுக்குள்ளாகும் மக்களின் கண்ணீரைத் துடைக்க அவர் செய்துவரும் சேவைகளைப் பாராட்டி அவருக்குப் பாராட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

## பரீட்சை முடிவு வெளியானது

(சித்தன்கேணி)

கடந்த பெப்ரவரி மாதம் விசேட சேவை அலுவலர்களுக்கு பதவி உறுதிப்படுத்துவதற்கு திட்ட அமுலாக்கல் அமைச்சினால் நடாத்தப்பட்ட பரீட்சையின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

க.பொ.த. சாதாரண பரீட்சையில் தமிழ் மொழிக்கும், கணிதத்திற்கும் திறமைச் சித்திகள் இல்லாத விசேட சேவை அலுவலர்களுக்கு பரீட்சையொன்று நடாத்தப்பட்டது. இப்பரீட்சையின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சையில் சித்தியடையாதவர்கள் மீண்டும் பரீட்சையில் தோற்ற வேண்டுமென்றும் பரீட்சை நடைபெறும் என்றும் இதற்கான விளம்பரம் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சபை கொள்வனவு

[வண்ணார்பண்ணை]

வடபகுதியில் பனம்பொருள் உற்பத்தியில் ஈடுபடும் கூட்டுறவுச் சங்கங்களினால் உற்பத்தி செய்யப்படும் சகல விதமான பனை உற்பத்திப் பொருட்களையும் பனை அபிவிருத்திச்சபை கொள்வனவு செய்து சந்தைப்படுத்த வேண்டுமென இச்சபை முடிவு செய்துள்ளது.

## மடுமாதா திருநாள் உற்சவம்

[மன்னார்]

மடுமாதா ஆலய அக்டோபர் மாத திருநாள் உற்சவம் நாளை நடைபெறவுள்ளது' இத் திருநாள் உற்சவத்தை முன்னிட்டு இன்று மாலை பாடற்பூசையும், திருச்சொரூப ஆசீர்வாதமும் இடம் பெறும்.

திருநாள் திருப்பலிப் பூசையை மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு தோமஸ் சௌந்தரநாயகம் ஒப்புக் கொடுப்பார்.

தொடர்ந்து மடுமாதா திருச்சொரூப சுற்றுப்பிரகாரமும் இடம்பெறும்.

## நடுத்தர வகுப்பினருக்கு வீட்டுவசதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சாதாரணமக்களின் வீடமைப்புத் திட்டங்களுடன் விரைவில் நடுத்தர வகுப்பினருக்கான வீடமைப்புத் திட்டங்களும், ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய மாவட்டங்களை விட கிளிநொச்சியில் வாழும் மக்கள் வீட்டுவசதி இன்றி அல்லல்படுகின்றனர். இந்த நிலையை [illegible] வீடமைப்பு அதிகாரசபையி[illegible]

இவ்வாறு கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்டக் காரியாலயம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் என். ஜெகநாதன் குறிப்பிட்டார்.

## கூட்டு வழிபாடு

[இறுப்பிட்டி]

புங்குடுதீவு மத்தி ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் பிரதி வெள்ளிக் கிழமைகள் தோறும் கூட்டுப் பிரார்த்தனை சபை செயலாளர் திரு ந சிவகுமாரன் தலைமையில் அடியார் திருக்கூட்டம், கூட்டுவழிபாடு நடத்தி வருகிறது. சபையின் பணிகளை விஸ்தரிப்பதற்கும் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

## ஓட்டுத் தொழிற்சாலை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் சுமார் 37 லட்சம்ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஓட்டுத் தொழிற்சாலையின் நிர்வாகப் பொறுப்பு நலன்புரி சங்கத்திடம் வழங்கப் பட்டுள்ளது,

இத் தகவலை பிரதேச அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் திரு எஸ். ஸ்ரீ சண்முகராசா தெரிவித்தார்.

இத் தொழிற்சாலையின் வருமானம் எக் காரணம் கொண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட மாட்டாது என்றும், வருமானத்தைக் கொண்டு இம் மாவட்டத்தின் கல்வி, மீன்பிடி உட்பட பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

## நெடுந்தீவில் முயற்சி

[வண்ணார்பண்ணை]

நெடுந்தீவில் பனை ஓலைப் பொருள் உற்பத்தியில் ஈடுபடும் யுவதிகளை ஒன்றிணைத்து பனம் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று உருவாக்கப்படவிருக்கிறது.

இந்த உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை அமைப்பதற்கான வேலைகளை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர்களில் ஒருவருமான திரு எஸ். வேலாயுதபிள்ளை செய்து வருகிறார்.

## பயிர் காப்புறுதி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் பெரும்போக வேளாண்மை செய்கையில் கமநலகாப்புறுதி செய்யவிரும்பும் விவசாயிகள் இம்மாதம் 31ம் திகதிக்கு முன்பு பயிர் காப்புறுதி செய்யவேண்டுமென்று மாவட்ட கமநலகாப்புறுதி ஆணையாளர் திரு. எம். கணபதிப்பிள்ளை சகல பெரும்பாக அலுவலர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

இதுவரை காலமும் அமுலிலிருந்த காப்புறுதிபற்றுச்சீட்டு பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் காப்புறுதிப்பணம் விதைப்புக்குமுன்பு அறவிடப்படவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிருஷ்ணன் தூது படனம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் புரட்டாதிச் சனிக்கிழமை தோறும் கிருஷ்ணன் தூது புராணபடனம் படிக்கப்பட்டுவருகின்றது. கடைசிச் சனிக்கிழமையன்று படனம் பூர்த்தியானதும்சுவாமிவீதிவலம் வருவார். (ப)

உங்கள் வயல்களில் களைகளை
ஒழித்து விளைச்சலைப் பெருக்க
மசீட்® பாவியுங்கள்




Grant K & E 4477

மசீட்® முளைவிடும் பருவத்திலேயே
களைகளைக் கொல்கிறது. விதைக்கப்பட்ட
நெற்பயிருக்கு அது எவ்வித தீங்கும் செய்வதில்லை.

LANKEM
விநியோகிப்போர்: லங்கெம்
சிலோன் லிமிட்டெட்
தொலைபேசி: 598292 - 6

® மொன்சன்ரோ கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட வர்த்தக அடையாளம்.

400 மி.லி. ரூ. 172/-

1542

# செக். மேற்கு ஜெர்மன் தூதரகம் மூடப்பட்டது!

## கி. ஜெர்மன் பிரஜைகள் அரசியல்புகலிடம் கோரியதன் எதிரொலி!!

ப்ரா, அக் 5,

செக்கோஸ்லாவாக்கியாவிலுள்ள மேற்கு ஜெர்மன் தூதரகம் நேற்று மூடப்பட்டது. இங்கு கிழக்கு ஜெர்மன் பிரஜைகள் சிலர் தமக்கு மே. ஜெர்மனியில் அரசியல் புகலிடம் கோரி தஞ்சமடைந்ததையடுத்தே மே ஜெர்மன் அரசு இந்தநடவடிக்கையை மேற்கொண்டது.

சுமார் 40 கிழக்கு ஜெர்மன் பிரஜைகள் செக்கோஸ்லாவாக்கியாவின் தலைநகரான ப்ராவிலுள்ள மே. ஜெர்மன் தூதரகத்தினுள் புகுந்துள்ளனர். தமக்கு மே. ஜெர்மனியில் அரசியல் புகலிடம் வேண்டுமென்று இவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இத்தூதரகக் கட்டடத்தின் இரண்டாவது மாடியிலேயே கி ஜெர்மன் பிரஜைகள் தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் இங்குதங்கி உறங்கியிருக்கும் வகையில் படுக்கைவிரிப்புச்கள் மற்றும் ஏனைய வசதிகளை மே. ஜெர்மன் தூதரகம் செய்து கொடுத்துள்ளது.

கிழக்கு ஜெர்மன் அரசிடம் இந்நிலைமை குறித்து மே. ஜெர்மன் அறிவித்துள்ளது. ஆயினும் இதுபற்றிப் பேசுவதற்கு கி. ஜெர்மன் மறுத்துள்ளது.

அதேவேளை மேற்கு ஜெர்மனியில் அரசியல் புகலிடம் கோரி செக்கோவில் இருந்து வரும் தனது பிரஜைகளைக் கைதுசெய்து சட்டநடவடிக்கை எடுக்கப்போதில்லை என்று கி. ஜெர்மன் உறுதியளித்துள்ளது.

செக்கோவில் தனது தூதரகம் மூடப்பட்டமைக்கு அந்நாட்டுடன் எதுவிதபிணக்கும் தனக்குக்கிடையாதென்றும், கி. ஜெர்மன் பிரஜைகளை அகற்றும்வகையிலேயே இந்நடவடிக்கையைத்தான் எடுத்ததாக மே. ஜெர்மன் அறிவித்தது.

அரசியல் புகலிடம் கோருவோர் காரணமாக கி. ஜெர்மனியிலிருந்து தனது தூதரகத்தையு மே. ஜெர்மன் மூடியுள்ளது. ஆனால் செக்கோவில் தற்காலிகமாகவே அது தூதரகத்தை மூடிவிட்டுள்ளது. (கி)

## தியாகராஜ சுவாமிகள் இல்லம் கலைக்கூடமாகிறது!

சென்னை, அக் 5,

திருவாரூரில் தியாகராஜ சுவாமிகள் அவதரித்த இல்லம் ஒரு கலைக்கூடமாக்கப்படவிருக்கின்றது.

இத்திருத்த வேலைகளுக்கென காஞ்சிகாமகோடி பீட கர்நாடக சங்கீதசபா இரண்டரை லட்சம் ரூபாவை வழங்கமுன்வந்துள்ளது.

வேதசாஸ்த்திரம், கர்நாடக சங்கீதம் என்பன திருவாரூர் தியாகப்பிரம்ம இல்லத்தில் கற்பித்துக் கொடுக்கப்படும். அத்துடன் இங்கு ஷியாமா சாஸ்த்திரிகள், முத்துசாமி தேசிகர் உட்பட சங்கீதமும் மூர்த்திகளையும் பூஜிக்கும் ஏற்பாடுகளும் விரிவாகச்செய்யப் படவுள்ளன.

இதேவேளை திருவையாற்றில் தியாகராஜ சுவாமிகள் உற்சவம் எதிர்வரும் ஜனவரி 8ந் திகதி முதல் 12ந் திகதி வரை நடைபெறும். இவ்வுற்சவத்திற்கென மத்திய அரசு 25 ஆயிரம் ரூபாவழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (கி)

## சைக்கிள் மோதி பலியானார்!

(யாழ்ப்பாணம்)

''கடையில் சிமினி வாங்கிக் கொண்டு இரவு 7 மணிக்கு வீதியால் வரும்போது 55 வயதான குட்டித்தம்பி சின்னம்மா சைக்கிளுக்குப் பலியானார்.''

ஏழாலையைச் சேர்ந்த இ.சின்னம்மாவின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது, யாழ். பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் நேற்று மரண விசாரணை நடத்தினர்.

மல்லாகம் - குப்பிளான் வீதியில் இப்பெண் வந்துகொண்டிருந்ததாகவும், எதிர்ப்பக்கத்திலிருந்து இருவர் சைக்கிளில் வந்துகொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டதாகவும், இப்பெண் அவ்விடத்தில் விழுந்ததும், சைக்கிளில் வந்தவர்கள் ஓடிவிட்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

இப்பெண் முதலில் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானர்.

சைக்கிளில் வந்து தலைமறைவான சந்தேக நபர்களான பி. செல்லக்கிளி, சி. ரஞ்சநாதன் ஆகியோரைக் கைது செய்யுமாறு பதில் நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனைக்கு பணித்து விசாரணையை ஒத்தி வைத்தார் (கு)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30 7-00
NIGHT SHIFT
(adults only)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு)

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ரஜனிகாந்த் சௌகார்ஜானகி
தீ
தீபாவளி வெளியீடாக
கே. பாலசந்தரின்
பூவிலங்கு

ராணி (யாழ. நகர்)
தினசரி 10-30, 2-30,
சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
ஸ்ரீநாத், ராஜீவ், ஜோதி
ரயில் பயணங்களில்
(ஈஸ்ட்மன் கலர்)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி

சாந்தி (யாழ்நகர்)
10-30—2-30
சிவாஜி-கே. ஆர். விஜயா
சத்யசுந்தரம்
(கலர் - புதிய பிரதி)

றீகல் [யாழ் நகர்]
10-30, 2-30, மட்டும்
ரத்தத்தின் ரத்தமே
10-10-84 முதல்
VISITING HOURS
(strictly for adults)
இருதயம் பலவீனமானவர்கள் கண்டிப்பாக இதனைப் பார்ப்பதை தவிர்த்துக்கொள்ளவும்.

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 4-30 - 6-45
Every lovers should see this film!
Willie games......
Phoebe crates
PARADISE
(Color) strictly for adults)
கண்டிப்பாக 17 வயதுக்குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30, 2-30
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
நவாப் நாற்காலி

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00,
சிவாஜி - ஜெயலலிதா
சவாலே சமாளி
(ஈஸ்மன்கலர்-புதிய பிரதி

வின்ஸர் [யாழ்.]
தினசரி 10-30, 2-00, 4-30, 6-30
புரூஸ் லீ யின் வாழ்க்கையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த
"BIG BOSS"
தொடக்கம் முதல் முடிவு வரை நாடி துடிக்கும் உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பை ஊட்டும் விறுவிறுப்பான கராட்டி சண்டைகள் நிறைந்த காட்சிகள்.
(புத்தம் புதிய பிரதி)

## இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—20(06-10-1984)
வாரம்—சனி
திதி—துவாதசி இரவு 11-51 வரை
நக்ஷத்திரம்—அவிட்டம் முற்பகல் 10-05ன் மேல் சதயம்

மேடம்:- வாழ்க்கைபுதிராக தோன்றும் ஆசாரக் குறைவிற்கும்இடமுண்டு சகோதரி ஒருவரின் பிரச்னை மனதிற்கு வேதனையைத்தரும்.

இடபம்:- அன்னைவழி ஆதரவு தாரளமாகக் கிடைக்கும் அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம் பொருள் வரவிற்கும் இடமுண்டு.

மிதுனம்:- அறவழியில் மனநாட்டம் செல்லும் தாராள மனப்பான்மையின் மூலம் பணம் செலவாகும் இளைய பிள்ளையால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

கடகம்:- பகை மூட்டம் வட்ட மிடும் வீணனவார்த்தைகளால் மனம் புண்படும் தொழில் துறையிலும் முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும்.

சிங்கம்:- கனிவானசம்பவங்கள் நடை பெறும் காதலர்களுக்கு கனவுஷியான தினம் சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறலாம்.

கன்னி:- அரசபயத்திற்கும் இடமுண்டு வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள வேண்டாம் மின்னியல்.பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுவோர் மிகவும் கவனம் செலுத்தவும்.

துலாம்;- கலைஞர்கள் போற்றப்படுவார்கள் வெளியூரிலிருந்து செய்தியும் கிடைக்கலாம் பிதாவழி தனவரவிற்கும் இடமுண்டு தருமகாரியங்களில் ஈடுபடுவீர்கள்,

விருச்சிகம்: வியாபாரத்துறையில் துரித முன்னேற்றம் புதுத்துறைகளில் மனம் நாடும் பயன்தரும் பிரயாணம் நண்பர்களின் ஆதரவு இவற்றுடன் தெய்வத்தின் துணையுமுண்டு.

தனுசு:- புதிய தொழில் மூலம் லாபம் கிடைக்கும் புத்திரர்களுடைய செல்வாக்கும் புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும் பூமியால் முன்றேற்றமுண்டு.

மகரம்:- அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும் உடல் நலம் பாதிக்கப்படலம் விலை பொருள்களினல் பணம் விரயமாகலாம் அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை.

கும்பம்:- விரக்தி நிலை உருவாகும் வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக் கூடும் உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம் நன்கு சிந்தித்தபின் செயலாற்றுக.

மீனம்:- துள்ளி வரும் வெள்ளிப்பணம் தொடர்புகளை பெருக வைக்கும் தள்ளி வைத்த மக்கள் உம்மை அள்ளி அணைத்திடுவர்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ரூபவாஹினி

மாலை
5-30 நியூஸ்பைடர் மேன் கார்ட்டூன் சித்திரம் (ஆங்கிலம்)
5-55 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
6-25 வரலாற்றுத்துறை நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 'ஜெமினிமேன்' [ஆங்கிலம்]
8-15 செய்திகள் [சிங்களம்]
8-35 நாடகம் [சிங்களம்]
9-05 இசை நிகழ்ச்சி [சிங்களம்]
9-30 செய்திகள் [சிங்களம்]
10-00 'ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச்' [ஆங்கிலம்]
10-30 உலகச் செய்திகள்
10-35 'ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச்' [தொடர்ச்சி]
10-55 நிகழ்ச்சிகள் முடிவு

## தபாலதிபர் ஒய்வு பெற்றார்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை தபாலகத்தின் பிரதம தபால் அதிபர் திரு. ஐ. இரத்தினசிங்கம் ஓய்வுபெற்றார்.

இவர் வல்வெட்டித்துறை தபாற்கந்தோரில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அத்தபாலகத்திலேயே ஓய்வூதியம வழங்கி மக்களின் பாராட்டைப் பெற்றார்.

இக்கட்டான காலகட்டங்களில் இவர் துணிச்சலுடன் செயலாற்றி மக்களுக்குத் திறம்படச் சேவையாற்றினர்.

இவர் மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை, யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் சேவையாற்றி, 35 வருடகாலசேவையைப் பூர்த்திசெய்து ஓய்வு பெற்றுள்ளார்.

## இளம் ஆசிரியை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரயோகம் செய்தபோதேஅவ்விளம் ஆசிரியை சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஆர்ப்பாட்டக்காரர்களில் பலர் காயமடைந்தனர் என்றும் கூறப்பட்டது காஷ்மீர் முதலமைச்சர் குலாம் மொஹமட் ஷா, முன்னுள் முதலமைச்சர்பரூக் அப்துல்லா ஆகியோரின் ஆதரவாளர்களே கலவரத்தில் இறங்கினர்.

நிலைமையைக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவர ஸ்ரீநகரில் காலவரையற்ற ஊரடங்குச் சட்டம் போடப்பட்டுள்ளது. [கி]

## நூல் அறிமுக விழா

[வேலணை]

மண்டைதீவு கலைச்செல்வியின் ''முற்றுப் பெருத முடிவுகள்'' நூல்அறிமுக விழா நாளை மண்டைதீவு மகா வித்தியாலயத்தில்நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திரு. சு.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் திரு.எஸ் சுப்பிரமணியம், டானியல்அன்ரனி, தமிழ்மகன் ஏ.பி சூரியகாந்தன், கா. மாணிக்கலிங்கம் உட்பட பலர் உரையாற்றுவர்.

## சுவாமி மகாதேவா நினைவுதின விழா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை, கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலய ஸ்தாபகர் மகாதேவா சுவாமிகள் நினைவுதின வழா இன்று வித்தியாலய அதிபர் திரு. ஆ. சபாரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது

சிவநெறிக்காவலர் திரு க. கனகராசா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். திரு. க. சி. குலரத்தினம் ''உபநிடதம்'' பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

## பிரார்த்தனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை நீராவியடி சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இன்று சனிக்கிழமை சுந்தரமூர்த்திநாயனர் அருளிய 'திருத்தொண்டர் தொகை பற்றிய நற்சிந்தனை'ப் பிரார்த்தனைக் கூட்டம் திரு. மு. மயில்வாகனம் தலைமையில் நடைபெறும். திருமதி அமிர்தாம்பிகை சதாசிவம் அருளுரை வழங்குவார்.

## கவிதை நூல் வெளியீடு

[புங்குடுதீவு]

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலய அதிபர் திரு.த துரைசிங்கம் எழுதிய ''பாலர் பாட்டு'' கவிதை நூலின் இரண்டாவது தொகுதி இம்மாதம் 10ம் திகதி புதன் கிழமை காலை புங்குடுதீவில் வெளியிடப்படவிருக்கிறது.

புங்குடுதீவு ஸ்ரீகணேசமகா வித்தியாலயத்தில் நிகழும் இவ் வெளியீட்டு விழவுக்குப் புங்குடுதீவு வட்டாரக் கல்வியதிகாரி திரு. க குகநாதன் தலைமை வகிப்பார்.

யாழ். கல்விப்பணிப்பாளர் திரு ம. சிமியாம்பிள்ளை இவ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நூலை வெளியிட்டுவைப்பார்.

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கலட்டி ஐக்கிய சன சமூக நிலையத்தில் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தலைவர் திரு மு.கதிரவேல் தனது தலைமையுரையில் நவராத்திரியின் சிறப்பு பற்றி எடுத்துக் கூறினர்.

மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன

### வடமாகாண அதிபர்கள் – கல்வியமைச்சர் சந்திப்பு:

# லலித்தின் நடவடிக்கைக்கு

## கோரிக்கைகள் அனுப்பப்பட்டது

[ஏ. வி. மாணிக்கம்]

வடமாகாண கல்லூரிகளின் அதிபர்கள் சங்கத் தூதுக்குழு கல்விஅமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது சமர்ப்பிக்கப்பட்ட இரு கோரிக்கைகளைநிறைவேற்றும்முகமாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியின் நடவடிக்கைக்காக, கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கல்விஅமைச்சின் செயலாளர் வடமாநில கல்விப் பணிப்பாளருக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதமூலம் இத்தகவலைத் தெரியப்படுத்தியுள்ளார்.

மேலும், கோரிக்கைகள் சம்பந்தமாகக் கல்வி அமைச்சு எடுக்கும் துரிதநடவடிக்கைகள் பற்றியும், கல்லூரி அதிபர்களுக்கு அறிவிக்குமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமாகாண அதிபர்களை மாணவர்களின் எதிர்காலநலன்களைக்கருத்தில்கொண்டு, பாடசாலைகளுக்கு மாணவர் வருகையை ஊக்கப்படுத்துமாறும் அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் 15-ம் திகதி வடமாகாண அதிபர்கள் சங்கத் தூதுக்குழுவினர் சங்கத்தலைவர் திரு க. அருணசலம் தலைமையில் கல்வி அமைச்சரையும், அமைச்சின் செயலாளரையும் நேரில் சந்தித்து, மாணவர்களின் கஷ்ட நிலைமைபற்றியும் ஆயுதப்படையினரின் சில நடவடிக்கைகளால் மாணவர்கள் பாடசாலைகளுக்கு சமுகமளிப்பதில் ஏற்படும் தடைகள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது தெரிந்ததே.

கல்வி அமைச்சிடம் அதிபர்கள் குழு சமர்ப்பித்த கோரிக்கைகளுள் முக்கியமான இரு கோரிக்கைகள் வருமாறு:

''பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டால் அம்மாணவர்கள் பாடசாலைகளின் அதிபர்கள் முன்னிலையில் வைத்தே விசாரணை செய்யப்பட வேண்டும்.

''பருத்தித்துறையில் எரிக்கப்பட்ட ஹாட்லிக்கல்லூரிக்கு அருகாமையில் இருக்கும் பொலிஸ் நிலையத்தைவேறு இடத்துக்கு இடமாற்றம் செய்து, அக்கல்லூரியில் மாணவர்கள் தொடர்ந்து கல்விபயில வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்''

இக்கோரிக்கைகளே தேசிய பந்தோபஸ்து அமைச்சருக்கு, தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(மா)

---

## மரண அறிவித்தல்

### ப. இராசையா

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகக் கொண்டவருமான இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர் ஆகிய ப இராசையா 5-10-84ல் காலமானார் இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், விநாயகம் ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெயந்தி, வசந்தி, சுகந்தி, கஜேந்திரன் (மொறட்டுவை பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லூசிடா (ஜேர்மனி), கணேந்திரன் (Accountant), குலேந்திரன் (டுபாய், அருந்தவம் (Accounts clerk Trinco), ஆகியோரின் மாமனாரும், கஜந்தா, கஜதூர்க்கன், சஜீவன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற திரு, திருமதி பண்ராடபிள்ளையின் மகனும், திரு, திருமதி தம்பிமுத்துவின் மருமகனுமாவார். ஈமக்கிரியைகள் 7-10-84 அளவெட்டியில் அவரது இல்லத்தில் காலை 10 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக அளவெட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இப்படிக்கு
சரஸ்வதி இராசையா

அளவெட்டி தெற்கு, அளவெட்டி 78

---

## மரண அறிவித்தல்

### திரு. வ. சோமசுந்தரம்

### (கந்தரோடை)

திரு. வ. சோமசுந்தரம் (Retd P. W. D. Overseer) காலமாகிவிட்டார். இவர் திரு செல்வராசா (R. M. P. Govt. Hospital Diyatalawa), திருமதி சுந்தரேஸ்வரி அம்பிகைபாகன் ஆகியோரின் அருமைத் தந்தையாவார். இவரின் பூதவுடல் கந்தரோடை இல்லத்திலிருந்து 7-10-84 ஞாயிறு முற்பகல் 9-30 மணிக்கு குடும்பமயானத்திற்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். நண்பர்களும், உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம். 77

---

## மரணஅறிவித்தல்

### திருமதி ஜெசி செல்லம்மா

### கதிர்காமநாதன்

திருமதி ஜெசி செல்லம்மா கதிர்காமநாதன் காலமானார். இவர் A. S கதிர்காமநாதனின் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) அன்பு மனைவியும், கருணாதேவி (ஆசிரியை திருக்கன்னியர் மடம், யாழ்ப்பாணம்) பத்மாதேவி, தவமணிதேவி, அமலாதேவி, காலம்சென்ற விமலாதேவி, ஜெயபாலன் (தொழிற்கந்தோர்) தவபாலன் (மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்), சத்தியபாலன் (இலங்கைவங்கி) பிறேம்தேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் புவனசுந்தரம் (ஆசிரியர்) நல்லாட்ணம் (இ. போ. ச மட்டக்களப்பு) ஆனந்தராஜா, கதிரேசு, யூனு. ருஜினி சவுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரிகைகள் சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு பருத்தித்துறை கிறீஸ்வ சேமக்காலையில் நடைபெறும்

அல்வாய் வடக்கு,
அல்வாய்.

75

---

# இப்படியும் நடக்கிறது

நேற்று முன்தினம் - விஜயதசமி தினத்தன்று பல ஆலயங்களிலும், பல ஆரம்பப் பாடசாலைகளிலும், சில தனியார் நிறுவனங்களிலும் குழந்தைகளுக்கு ஏடு தொடக்கப்பட்டது.

தமிழ்க் கூறும் நல்லுலகில் இதுபெரிய செய்தி அல்ல. ஆனால், விஜயதசமியன்று நல்லூர் அத்தியடிப் பிள்ளையார் கோவிலில் சில குழந்தைகளுக்கு-

அ, ஆ, இ என்றும்; 1, 2, 3 என்றும் மட்டுமல்ல... A, B, C... என்றும் எழுத்துக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுதான் புதினம்!

ஏடு தொடக்கலின் போது 'இங்கிலீஷும்' இடம் பெற்று விட்டது கண்டு சிலர் விழித்த போது, ஏடு தொடக்கிய புலவர்,

''ஆங்கிலம் உலகமொழி மட்டுமல்ல, இறைவனோடும் இப்பொழுது நெருங்கிய தொடர்பும் உடையது... ஆவி உலகப் பேச்சுக்களும், கயிலாயத் தொடர்புகளும் A, B, C எழுத்துக்களால் தான் நடைபெறுகின்றன. வட மொழியும் தென் தமிழும் ஆயினான்காண் என்பதோடு ஆங்கிலமும் ஆயினான் காண் என்றும் கூறலாம்..'' என்று விளக்கிய போது, கூடிநின்ற பலர் மூக்கில் விரலை வைத்தனர்.

ஏடு தொடக்கிய இந்தப் புலவர் யார்? பேச்சிலும் செயலிலும் புரட்சிசெய்யும் சாட்சாத் ஈழத்துச் சிவானந்தன் தான்.

அண்ணாமலையில் புலவர் இருந்த காலத்தில், பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம், ஈழத்துச் சிவானந்தனை, ''நீர் உண்மையிலேயே ஓர் வெஸ்ற்றேண் புலவர்தான்...'' என்று குறிப்பிட்டது பொருத்தம்தான்!

— 'ஊடுருவி'

---

## பரீட்சை நடக்காது

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள வெளிவாரி மருத்துவ மாணவருக்கு லண்டன் சர்வகலாசாலை பரீட்சைகள் நடத்துவதில்லை என்று யாழ்ப்பாணம் மருத்துவ சங்கத்தினருக்கு அறிவித்திருப்பதாக தெரியவருகிறது.

---

# “ஸ்தாபனத்தை நம்பிவாழும் ஊழியர் பற்றி சிந்தியுங்கள்”

## யாழ்.ஐ.வி.சங்க ஊழியர்கள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

'ஏதோ ஏதோ காரணம் சொல்லி எம்மைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு ஒன்றன்பின் ஒன்ருக ஒருசிலர் கொள்ளையடிக்கின்றனர். அவர்கள் கூறும் காரணம் சரியா அல்லது பிழையா என்பதுபற்றி நாம் அபிப்பிராயம் கூறமுற்படவில்லை. எரிந்த நிலையில் உள்ள இந்த ஸ்தாபனத்தில் மீண்டும் மீண்டும் கொள்ளையடிப்பவர்கள் இந்த ஸ்தாபனத்தையே நம்பி வாழும் ஊழியர்கள் பற்றி சற்று சிந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்'

யாழ். ஐக்கிய வியாபார சங்கத்தின் ஊழியர்கள், விடுத்துள்ள வேண்டுகோளில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

கொள்ளை அடித்து எம்மை நடுத்தெருவில் விட்டுப்பட்டினியால் சாகவிடுவதால் என்ன பலன் கிடைக்கப்போகிறது? இங்கு வேலைசெய்யும் ஊழியர்களின் நலன்களையும், நியாயமான விலையில் தட்டுப்பாடில்லாமல் பொருட்களைப் பெற்றுவரும் பல்லாயிரக் கணக்கான நுகர்வோரின் நலன்களையும் கருத்திற்கொண்டு இந்த ஸ்தாபனத்தில் இனிமேலாவது கொள்ளைச் சம்பவங்கள்இடம்பெருது பார்த்துக் கொள்ளுமாறு அக்கறையுள்ள அனைவரையும் மன்ருட்டமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

---

### உதவி அரசாங்க அலுவலகங்களில் நடந்த திடீர்ச் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர்களினது காரியாலயங்களில் இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி ஒன்று புகுந்து பலத்த தேடுதல் வேட்டையில் ஈடுபட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் இச் சம்பவம் இடம்பெற்றது

முதலில் நல்லூர் உதவி அரசாங்கக் காரியாலயத்துள் புகுந்த சுமார் 10 பேர் கொண்ட கோஷ்டியினர் உத்தியோகத்தர்களைப் பயமுறுத்தி தொலைபேசித் தொடர்பைத் துண்டித்து விட்டு வரைபடங்கள் எங்கே இருக்கிறதென்று விசாரித்தார்களாம்.

அப்படியான படங்கள் இல்லையென்று தெரிவிக்கப்பட்டதும் அங்கெல்லாம் சோதனை நடத்திவிட்டு சென்று விட்டார்கள்.

அதேபோல் யாழ் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலும் நடைபெற்றதாகவும் ஆனால் சிதைந்த நிலையில் இருந்த இருவரை படங்களை மட்டும் அக் கோஷ்டியினர் எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மா)

---

### மாநகர சபை வான் கிடைத்தது

[யாழ்ப்பாணம்]

சடத்தப்பட்ட யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான வான், நேற்றுநண்பகல் தட்டாதெருச் சந்தியில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் வெலிங்டன் சந்தியில் வைத்து இனந்தெரியாத நான்கு இளைஞர் மாநகர சபை வானை கடத்திச் சென்றது தெரிந்தே. (மா)

---

### சாரணருக்கு கௌரவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திரிசாரணர் குழுவினர். நல்லூர்க் கோவிலுக்கு ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி, யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு சி வீ. கே சிவஞானத்தால் இன்று கௌரவிக்கப்படவுள்ளனர். இவ்வைபவம் இன்று காலை 9 மணிக்கு 'வின்இன் இசைக் கலைமன்றத்தில் நடைபெறவுள்ளது. (வி)

---

(யாழ்ப்பாணம்)

யாழ் கஸ்தூரியார் வீதி கொலை விலக்கி ஆரோக்கிய மாதா திருநாள் உற்சவம் கடந்த 4-ம் திகதி ஆரம்பமாகியது. தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறும்.

---

இப் பத்திரிகை ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.